ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 7. ஜூன், 1944 நெ. 3

## எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம்.எல்.எ.

எஸ். சத்தியநாராயணா.

## எடிடர்.

ஸ்ரீமான்

வி. வியன்னா, பி.எ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்—

அதிக நூல் நூற்று, ஆடைகளை யணிய வேண்டும் ... 111

கரம்பு நிலம்புகள் சாகுபடி .... ... 113

2. விவசாய அபிவிருத்தி: 1000 கோடி ரூபாய் திட்டம் ... 114

3. கிராம நிர்மாண திட்டமும் எளிய வாழ்க்கையும் ... 115

4. இந்தியாவில் சின்கோனா பயிர் ... 117

5. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 119






கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# The Village Panchayat Journal

VOL. VII] JUNE, 1944 [No. 3

*The Editorial Committee do not hold themselves responsible for views expressed by contributors. Contributors are requested to write legibly and on one side of the paper. Manuscripts will not be returned unless stamps are sent to cover postage. Matter intended for the issue of any particular month should reach the Committee before the 15th of the previous month.*

---

## Spin more and Clothe better.

The grow more food campaign has been launched by the Government to increase the output of food for the nation. There is a shortage of cloth also. The pre-war figures show that *per capita* in India we consumed sixteen yards of cloth a large percentage of people going with a longoti on. What the nation as a whole consumed came to 650 crores of yards of cloth. To-day production is in great demand for the army. We are told that just 400 crores of yards out of that production is possible to be released for the use of the civilian population. That means that the scanty provision we had of 16 yards per man has been reduced by nearly half. Therefore cloth has gone up in price. Government has tried to control it by several expedients. Whatever measures the Government has taken the problem of black markets still faces us. Recently Government had to take possession of about twelve mills under the Defence of India Rules. Conferences have been held to discuss the best means of distributing this cloth to the masses. It is unfortunate that still, after five years of war, we should be groping our way to find a trustworthy distributive agency having had forty years of co-operative effort in this country. One does not know why the Governments in this country fight so shy of this movement and peoples' leaders are equally blind to the advantages that must ultimately accrue by switching over to co-operative economy is as many spheres of activity as possible. Apart from this question of the distributive agency for mill products does not the Government see and do not our leaders see that there is immediate need for a widespread campaign to make the predominantly agricultural population of India use cotton grown in its own fields, spin it in its spare time and get it woven locally for local

consumption. If out of war conditions you are prepared to encourage hand-made paper and khaddar cumblies how does it happen that alone in the case of hand-made yarn you should be so entirely mum. The old economic stunts have all vanished bombed out of existence by the necessities of the moment and we are confident that no orthodox economist dare raise his head against the proposal to launch a spin more campaign. Will the Government take up the campaign and push it with as much vigor as it displays in regard to the grow more food campaign. Whether the Government does it or not, it is the duty of the representatives of the people like the members of the Panchayat Boards to study the question carefully and popularise the cry 'spin more and clothe better'. In India hand weaving has stood the onslaughts of the mill industry—indegenous as well as foreign—and hand spinning will equally stand provided its true economic significance is understood in its proper setting. To count the cost of cotton grown in one's own land on ridges in the field at market rates, to count the cooly of the spinner for the time that he would have otherwise wasted and add up figures and jump to the conclusion that hand-spun and hand-woven cloth is not economic is to substitute artificial values for real values and deceive oneself and the world. While we have no objection to the mill industry flourishing and even exporting its products to foreign countries if it thinks it can make better profits there, as has probably happened now, we shall not allow the activity of the nation to go to waste and its economic strength to be undermined by letting opportunities exist for black markets. Local production and consumption of necessaries of life, as far as that may be possible, and co-operative distribution are the only remedies that we can see in the present situation and we are sure that even after the war this economy is bound to be the best economy. We, therefore, draw the attention of all the Panchayat members that the time has come for them to play the propagandist so that they may keep their constituents fairly fed and decently clothed.

---

## Waste land for cultivation.

25,000 acres of waste land belonging to the Government in the Chittoor district is being granted in compact blocks for temporary cultivation under the grow more food rules for cultivation free of assessment. If Government water is taken water-cess should be paid. For purposes of reclamation loans at Rs. 10 to Rs. 15 per acre free of interest for the first year and at 3 per cent later will be granted. If the land is brought under cultivation before 31st of October 1944 Rs. 5 per acre out of the amount advanced will be treated as a subsidy and the rest recovered during the currency of the temporary

cultivation *i.e.* 3 years. A condition is appended that if any of these lands are required sooner for assignment to demobilised soldiers the Government will resume them after paying the cost of reclamation. In the main this scheme is certainly welcome. But two or three points seem to require further consideration, 31st of October 1944 is not far away. Surely before assignments are made it will take sometime, disbursement of loans will take further time, and it may not be easy to bring the land under cultivation by the date mentioned. It is no doubt true that if further delayed no crop may be raised this year. It is to be hoped that this condition for the earning of the subsidy will be enforced with due caution. The man who has brought a block of land under cultivation should not be in a position to be evicted wholly at any time during this period. Naturally after the three years temporary cultivation he looks forward to be granted a patta in the usual course. It is only when he has an abiding interest that real effort and necessary investment can forthcome. If the Government want that maximum good should come out of such experiments there is need for them to be free from imposing conditions that militate against full effort. We do not desire that the Government should not think of its demobilised soldiers; but when once you have called men to toil at land, it is fair you should give them some hope that they will have some part of their labour to stand them in good stead. It would be well if the Government establishes the principle that the toiler shall have his proper return and tell him that he shall be left with a minimum the rest being resumed if need be for the demobilised soldier. Again the principle on which the lands will be assigned is all important. Anxious to raise more food the Government should not hand over big blocks to individual agricultural magnates. Much better that co-operative societies are registered on the spot and blocks of land are handed over to such societies with the stipulation that a part of the land granted to them shall be earmarked for demobilised soldier members as and when they join. That would be a capital method to bring back the demobilised soldier to his usual civil life.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 7 | ஜுன், 1944 | No. 3

*நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபால் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.*

---

## தலையங்கம்.

### அதிக நூல் நூற்று, ஆடைகளை யணிய வேண்டும்.

தேசத்தில் ஆகாரத்தின் உற்பத்தியை அதிகரிக்க கவர்மெண்டார் அதிக உணவு பொருள் உற்பத்தி இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அத்துடன் துணி பஞ்சமும் இருந்து வருகிறது. யுத்தத்திற்குமுன் எடுக்கப்பட்ட கணக்குபடி, நம் தேசத்தில் தலைக்கு 16 கஜம் துணி உபயோகித்தார்கள். பெரும்பாலோர் லங்கோட்டாவைதான் அணிந்தார்கள். தேசத்தில் 650 கோடி கஜம் துணி உபயோகிக்கப்பட்டது. இப்போது துருப்புகளின் தேவை மிக்க அதிகமாக இருக்கிறது. இதர ஜனங்களின் தேவைக்கு 400 கோடி கஜம் துணியே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தலைக்குத் தேவையான 16 கஜத்திற்குப் பதில் அதில் பாதி அளவே கிடைக்கும். ஆகையால் துணிகளின் விலை ஏறிவிட்டது. கவர்மெண்டார் அதை தடுக்க பல முறைகளை கையாண்டு வருகிறார்கள். ஆயினும் சரக்கை பதுக்கி வைத்து கள்ளத்தனமாக செய்யும் வியாபாரம் (Black Market) அதிகரித்து வருகிறது. சமீபத்தில் கவர்மெண்டார் தேச தற்காப்பு சட்டத்தின்கீழ், 12 துணி ஆலைகளை எடுத்துக்கொள்ள வேண்டி வந்தது. பொது ஜனங்களுக்கு இத்துணிகளை விநியோகம் செய்ய ஏற்பாட்டை பற்றி ஆலோசிக்க மகாநாடுகள் கூட்டப்பட்டன.

நாற்பது வருஷ கூட்டுறவு இயக்க அனுபவம் இருந்தகூட, விநியோக விஷயமாய் சரியான ஸ்தாபனம் ஏற்படாமல் இந்த 5 வருஷமாய், நாம் தடு

மாற வேண்டிய நிலைமையில் இருப்பதானது மிக்க துரதிருஷ்டவசமானது. இந்த இயக்கத்தைக் குறித்து என் கவர்மெண்டார் இவ்வளவு அலக்ஷியமாக இருக்கிறார்கள் என்பது புலப்படவில்லை. பொதுஜனத் தலைவர்களும் கூடுமான வரையில் எல்லா இலாகாக்களையும் இந்த இயக்கத்தின் உதவி கொண்டு நடத்துவதின் பலன்களை நன்கு உணரவில்லை. மில் துணிகளை விநியோகம் செய்ய ஸ்தாபனம் ஏற்படுவதைத் தவிர நம் தேசத்தில் பெரும் பாலோரான விவசாயிகளை, தங்கள் நிலங்களில் பயிராகும் பருத்திகளையே உபயோகித்து, ஒழிவு நேரங்களில் நூல் நூற்று, துணி நெசவு செய்து அணிந்துக்கொள்ளும்படி செய்ய உடனே பிரசாரம் துவக்க வேண்டிய அவசியத்தை கவர்மெண்டாவது, பொது ஜனத் தலைவர்களாவது உணரவில்லையா. யுத்த நிலைமை காரணமாக கையால் செய்த காகிதம், கையால் நெய்த கம்பளி, இவை விஷயமாக கவர்மெண்டார் ஆதரவளிக்கத் தயாராக இருக்கும்போது, கையால் நெய்த நூல் விஷயமாக மட்டும் பராமுகமாக இருப்பதேன். யுத்தத்தில் பண்டைய கால பொருளாதார கொள்கைகளெல்லாம் மறைந்துவிட்டன. அதிக நூல் நூற்கும் இயக்கத்தை ஆக்ஷேபித்து ஒரு பொருளாதார நிபுணரும் குறை கூற தைரியமிருக்காது. இந்த இயக்கத்தை துவக்கி கவர்மெண்டார் அதிக ஆகார உற்பத்தி இயக்கத்தை எவ்வளவு உற்சாகத்துடன் நடத்துகிறார்களோ அதே உற்சாகத்துடன் இதையும் நடத்துவார்களா. அப்படி கவர்மெண்டு செய்தாலும் செய்யாவிட்டாலும், பஞ்சாயத்து அங்கத்தினர்கள்போல் பொது ஜன பிரதிநிதிகள், இவைகளை கவனித்து, அதிக நூல் நூற்கவும், ஆடைகளை அணியும் வலுத்த பிரசாரம் செய்வது அவர்கள் கடமை. நம் தேசத்தில் மில் துணிகளின் போட்டிக்கிடையே கைத்தறி துணிகள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அதேபோல், அதனுடைய முக்கியத்துவம் சரிவர உணரப்பட்டு ஆதரிக்கப்பட்டு வந்தால் கையால் நூற்கப்படும் நூல் தொழிலும் வளர இடமிருக்கிறது. ஒரு விவசாயியின் பூமியில் மேடுகளில் பயிராகும் பருத்திக்கு மார்கெட் ரேட்ப டிக்கு மதிப்பு கணக்கு போட்டு, விவசாயி வேலையில்லாதிருக்கும் நேரங்களில் நூற்பதற்கு கூலி கணக்கு போட்டு, உடனே கை நெசவு துணி பொருளாதார முறையில் லாபகரமாக நடக்க இடமில்லை என்ற முடிவிற்கு வருவதானது, உண்மை நன்மையை மறந்து, தன்னையும் இதரர்களையும் ஏமாற்றிக் கொள்வதேயாகும். நமக்கு மில் தொழில் விருத்தியடைந்து, தன்னிஷ்டப்படி அயல்நாடுகளுக்குக்கூட அதிக லாபம் கிடைக்கும் பக்ஷத்தில் துணிமணிகளை ஏற்றுமதி செய்வதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் திருட்டு வியாபாரம் ஏற்பட சந்தர்ப்பம் கிடைக்கும்படிக்கும், தேசத்தின் பொருளாதார வலிவு குன்றி விடும்படிக்கும் நாம் அனுமதிக்கக்கூடாது. தற்கால நிலைமையில் அந்தந்த ஸ்தலங்களின் முக்கிய தேவையான பொருள்களை அங்கங்கேயே கூடுமான வரையில் உற்பத்தி செய்தும், கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் அவைகளை விநியோகிக்க ஏற்பாடு செய்வதும்தான் நன்மையளிக்கும்; மேலும் யுத்தத்திற்குப் பின்னும் இந்த ஏற்பாடுதான் நன்மை தருவது என்று வற்புறுத்த

மாகத்தான் செய்யும். ஆகையால் நாம் எல்லா பஞ்சாயத்து அங்கத்தினர்களின் கவனத்திற்கு இவ்விஷயத்தை கொண்டு வந்து, அவர்கள் எல்லோருக்கும் இப்போது பொது ஜனங்களுக்கு சரியான வழிகாட்டி, நல்ல ஆடைகளை அணியும்படி சகாயம் செய்ய பிரசாரர்களாக இருப்பதற்கு நல்ல சமயம் வாய்த்திருக்கிறது,

---

## கரம்பு நிலம்புகள் சாகுபடி.

அதிக உணவு உற்பத்தி இயக்கம் சம்பந்தமாக சித்தூர் ஜில்லாவில் கவர்மெண்டுக்குச் சொந்தமான 25,000 ஏகரா கரம்பு நிலங்களை வரியன்னியில் சாகுபடி செய்வதற்காக சதுர சதுரங்களாக கொடுக்கப்படுகின்றன. கவர்மெண்டு தண்ணீரை உபயோகப்படுத்தினால் தண்ணீர் தீர்வை செலுத்தவேண்டும். அவைகளை சீர்படுத்த முதல் வருஷம் வட்டியில்லாமல் ஒரு ஏகராவுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் கடனாக கொடுக்கப்படும். பின்னிட்டு 3 சத விகிதம் வட்டி விதிக்கப்படும். நிலத்தை 31-10-44க்குள் சாகுபடிக்கு கொண்டு வந்தால், கடன் தொகையில் 5 ரூபாய் சகாய தொகையாகவும், பாக்கியை 3 வருஷ சாகுபடிக்குள் வசூலிக்கப்படும். யுத்தத்திலிருந்து திரும்பி வரும் சைன்னியத்தில் சேர்ந்த ஆள்களுக்கு கொடுப்பதற்காக அவை தேவையாக யிருந்தால் சீர்படுத்த செலவான தொகை கொடுக்கப்பட்டு, அவை திருப்பி எடுத்துக்கொள்ளப்படும். மொத்தத்தில் இத்திட்டம் வரவேற்கத் தக்கதே. ஆனால் 2, 3 விஷயங்கள் புனராலோசனை செய்யப்பட வேண்டும். 31-10-44க்குள் நிலத்தை ஸ்வாதீனப்படுத்தி, கடனுக்கு மனு போட்டு, பெற்று, சாகுபடிக்கு கொண்டுவர சாத்தியப்படாது. அதற்குப்பின் தாமதித்தால் இவ்வருஷம் சாகுபடியே முடியாது என்பது வாஸ்தவம்தான். இனமாக அளிக்கப்படும் திரவிய சகாயத்திற்குண்டான நிபந்தனையானது ஜாக்கிரதையாக அமுலுக்குக் கொண்டுவரப்படும் என்று நம்புகிறோம். இந்த சமயத்தில் ஒரு சதுரத்தை சாகுபடிக்கு கொண்டு வந்திருக்கும் ஒருவனை அடியோடு வெளிக்கிளப்புவது தப்பு. மூன்று வருஷம் சாகுபடி செய்தபின் அந்நிலங்களுக்கு அவன் பேரிலேயே பட்டா கொடுக்கப்படும் என்று அவன் எதிர் பார்ப்பது இயல்பே. நிலத்தில் அவனுக்கு நிரந்தரமான பாத்தியதை கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லாவிட்டால், அவன் ஊக்கத்துடனும், முன் பணம் போட்டும் வேலை செய்வான். கவர்மெண்டார் இதற்கு தடை செய்யும் நிபந்தனைகளை விதிக்கக்கூடாது. சைன்யத்திலிருந்து திரும்பி வரும் ஆட்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று நாம் சொல்லவில்லை. ஆனால் நிலத்தில் பாடுபடும்படி ஜனங்களை அழைத்தபின் அவர்கள் தங்கள் உழைப்பின் பலனை அடையும்படி செய்வதுதான் நியாயம். உழைத்தவனுக்குக் கடைசி பக்ஷமாக தேவையான நிலம் அவனுக்கு கொடுக்கப்பட்டு பாக்கி நிலமே யுத்தத்திலிருந்து திரும்பி வருபவர்களுக்கு கொடுக்கப்படும் என்ற கொள்கையை கவர்மெண்டார் கடைபிடிக்கவேண்டும். எந்த

முறையில் இந்நிலங்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதும் முக்கியமான விஷயம். அதிக ஆகார உற்பத்திக்கு ஆசைபட்டு, கவர்மெண்டார் பெரிய சதுரங்களை மிராசுதாரர்களுக்கு கொடுத்துவிடக்கூடாது. இதைவிட அங்கங்கு கூட்டுறவு சங்கங்கள் ஸ்தாபித்து, இந்நிலங்களை அவைகளிடம் ஒப்படைப்பது மேல். அந்நிலங்களில் சில பாகங்களை யுத்தத்திலிருந்து திரும்பி வரும் சிப்பாய்களுக்கு கொடுக்க ஒதுக்கி வைக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கலாம். இதுவே அவர்களுக்கு நன்மை செய்ய சரியான வழி.

---

# விவசாய அபிவிருத்தி: 1000 கோடி ரூபாய் திட்டம்.

---

அடுத்த 10 வருஷத்தில் விவசாய உற்பத்தியை 50 சத விகிதம் அதிகரிக்கவும், அதற்கடுத்த 15 வருஷத்தில் 100 சத விகிதம் அதிகரிக்கவும் ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கிறது. வருஷா வருஷம் இதற்கு ஏற்படும் செலவு தொகை 20 கோடி ரூபாய்.

நெல் முதலிய தான்யங்கள் 10 சத விகிதமும், பருப்பு தினுசுகள் 20 சத விகிதமும், கொழுப்பு, எண்ணெகள் 250 சத விகிதமும், ஆகார பொருள்கள் 50 சத விகிதமும் அதிகப்படுத்தப்படவேண்டும் என்று திட்டப்படி கண்டிருக்கிறது. 61 கோடி ஏகரா பூமியில், இப்போது 25 கோடி ஏகரா நிலங்கள் பயிர் செய்யப்படாமல் தரிசாக இருக்கின்றன. பெரிய நிலச் சதுரங்கள் சாகுபடி செய்யப்படாத காரணத்தை கண்டுபிடித்து, அவைகளை சீர்படுத்தி பயிர் செய்யும்படியான நிலமைக்குக் கொண்டுவருவதைப்பற்றி யோசனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. கால்வாய் மூலம் நீர் பாசனம் செய்வதோடு கூட, தண்ணீரை, இயந்தர சாதனங்கள் மூலம் பாய்ச்சுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவைகள் சரியாக பாயா விட்டால், குழாய் கிணறுகள், ஏரிகள் முதலியவை வெட்டவேண்டும். மழை ஜலத்தை தேக்கி நிறுத்தி ஏரிகள் கட்டி, தேவையான இடங்களில் கரைகள் கட்டவேண்டும். ரசாயன எரு உள்பட எல்லா எருக்களும் தாராளமாக உபயோகப்படுத்தப்படவேண்டும். எருக்களை உபயோகித்தால் 10 முதல் 15 சத விகிதம் வரையில் அதிக உற்பத்தி உண்டாகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு விதை பண்ணை ஸ்தாபித்து விதைகளை அதிகரித்து சேகரித்து வைக்கவும்! விநியோகம் செய்யவும் வசதிகள் செய்யப்படவேண்டும். நிலங்களை ஒன்று கூட்டி, கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் கிராமங்களை மிகுதியாக இருக்கும் பொருள்களை ஒன்றுகூடி விற்கும்படி செய்யவேண்டும்.

கால் நடைகள் அபிவிருத்தி விஷயமாக, ஆகாரம், கன்று போடுதல், நோய் வராமல் தடுத்தல் இவைகளைக் குறித்து ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. பல துறைகளில் சீக்கிரம் அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால் மத்திய கவர்மெண்டு இவைகளை முன் நின்று செய்யவேண்டும். அதற்கு ஒரு சமஷ்டி விவசாய இலாகா ஏற்படுத்தப்படவேண்டும். மத்திய கவர்மெண்டு உத்தியோகத்திலிருக்கும் சர். பி. காரெகப் இத்திட்டத்தைக் குறித்து டில்லியில் பத்திரிகைக்காரர்களுக்கு விவரித்துச்

சொன்னார். அவர் இத்திட்டத்தினால் ஏற்படும் செலவு மதிப்பு பிரிடிஷ் இந்தியாவிற்கு மாத்திரம் என்று சொன்னார். ஆனால் அபிவிருத்தி முறைகள் சமஸ்தானங்கள் உள்பட இந்தியா முழுவதற்கும் தகுந்தவை என்றார், முதல் முதல் எல்லா வேலைகளுக்கும் தகுதியான ஆட்களுக்கு தகுந்த அளவிற்கு பயிற்சியளிக்கவேண்டும். அதோடு சீர்திருத்தம் செய்து சாகுபடிக்கு கொண்டுவர இருக்கும் பிரதேசங்களை அளவு எடுத்து கணக்கு வைக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு விவசாய சங்கம் ஸ்தாபிக்கப்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும், தொழில் நிபுணருக்கும் விவசாயிக்கும் தொடர்பு ஏற்படுத்த ஒரு கிராம மேஸ்திரி (Guide) இருக்க வேண்டும்.

சென்னை மாகாண கவர்மெண்டார் இம்மாகாணத்தின் ஆகாரத் தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்ளுவதற்கு அனுகூலமாகயிருக்கவேண்டும் என்ற அடிப்படையான கொள்கையுடன் எல்லா திட்டங்களையும் பரிசீலனை செய்வார்கள். இந்த யுத்தம் காரணமாக இம்மாகாணத்தில் அநேக எல்லா உணவு பொருள்கள் உற்பத்தியிலும் குறைவுபட்டிருப்பது வெளிப்பட்டது. பருப்பு வகைகள் மாத்திரம் 150,000 டன்கள் குறைவு.

கோயம்பத்தூர் விவசாய காலேஜின் மாணவர்களின் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டிருக்கிறது, மூன்று வருஷம் பயிற்சியளிக்கப்படும். இந்த மாணவர்கள் யுத்தத்திற்குபின் விவசாய அபிவிருத்தியில் அவர்களுக்குண்டான பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

---

# கிராம நிர்மாண திட்டமும் எளிய வாழ்க்கையும்.

---

### Mr. ஸ்பென்சர் ஹாட்சு எழுதிய ‘இன்னும் முன்னேற்றி’ (Further upward) என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

எவனுக்கு தேவைகள் அதிகமோ, அவன்தான் ஏழை என்று ஒரு அறிவாளி எழுதியிருக்கிறார். கிராம புனருத்தாரண இயக்கம் மிக்க எளிய முறையில் நடத்தப்பட்டாலன்றி, அதனால் ஏற்படும் செலவை பரிக்க முடியாமல், பணம் இல்லாத காரணத்தினால் லக்ஷக்கணக்கான ஏழை மக்களுக்கு உதவி செய்ய இயலாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற உண்மை இந்த இயக்கத்தை இத்தனை வருஷம் நடத்துவதால் எங்களுக்கு ஏற்பட்ட அனுபவம். ஊழியர்கள் எளிய வாழ்க்கையை மேற்கொண்டாலன்றி, தர்மத்திற்கு உதவவேண்டிய நிதியின் பெரும்பாகம் நம் சொந்த செலவிற்கே சரியாகிவிடும். எங்கனவே, இந்தியாவில் ஆடம்பர வாழ்க்கையை கைக் கொள்ளாத இளைஞர்களையே புனருத்தாரண வேலைகளுக்கு அமைத்துக்கொள்ளவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களை அமைத்துக்கொண்டால்தான், தேவையான ஊழியர்களை வைத்துக்கொள்ளமுடியும், பலதேவைகள் இல்லாவிட்டாலும் வாழ்க்கையை நடத்த தைர்யம் கொண்ட ஊழியர்களே இந்தியாவில் கிராம புனருத்தாரண வேலைக்கு ஏற்றவர்கள். பெரிய கட்டடங்கள் இல்லாமலேயே விஸ்தாரமான வேலைகளை செய்யமுடியும் என்று மார்த்தாண்டத்தில் செய்யப்பட்டு வரும் வேலையால் நிரூபிக்கப்படுகிறது. ஒவ்வொரு துறையிலும் எளிய முறைகளையே

கையாளவேண்டும். அதனால் ஒவ்வொன்றின் செலவு குறைவு பட்டு, பல துறைகளை நடத்த பணம் மிச்சப்படும். பல மக்களுக்கு உதவி புரிவது சாத்தியமாகும், சைகிலிலாவது, பஸ்விலாவது போகக்கூடிய ஒரு இடத்திற்கு ஒரு ஊழியர் ஒரு மோடார் வண்டியில் செல்வாரேயானால், அவர் செய்யும் ஊழியத்தின் மகிமையில் ஒரு பாகம் குறைவுபட்டுவிட்டதாகவே நான் கருதுவேன். எனக்கு பிரயாணப்படி கொடுப்பவர் என்னை மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்யவேண்டாம் என்று எளிதில் சொல்லலாம். ஆனால் அப்படி செய்தும் எனக்கு ஒரு வருஷ பிரயாணத்திற்கு திட்டம் போட்டிருக்கும் பணம் எழு மாதத்திலேயே செலவாகிவிடுகிறது என்பதை அவர் மறந்துவிடுகிறார். நான் மேல் வகுப்பில் பிரயாணம் செய்தால், புனருத்தாரண வேலைகள் மெச்சக்கூடிய விதமாய் நடத்தப்பட்டுவரும் பல இடங்களை நான் உதவி புரிவது என்ற என் வாக்குறுதியை என்னால் நிறைவேற்றிவைக்க முடியாது.

இந்தியாவில் பெஞ்சுகளுக்காக அதிக பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது. புனருத்தாரண வகுப்பு பெஞ்சுகளில் உட்கார்ந்து நடத்தப்பட்டால் என் மனம் பூர்ண திருப்தியை அடைகிறதேயில்லை, உட்காருவதற்கு எளிய, சதர பாய்களே சிறந்தவை. அவைகளின் செலவு சொற்பம். சாப்பிடுவதற்காவது, வேறு காரியத்திற்காவது, அரை தேவையானல், அவைகளை சுலபமாக எடுத்து விடலாம். சிறு வயது முதல் பெஞ்சுகளேயே உபயோகித்து வந்த எனக்கு பாய்மேல் உட்கார்ந்து குறிப்புகள் எழுதுவதும் எளிதில் செய்ய முடிகிறது.

எளிய வாழ்க்கையில் மற்றொரு உதாரணம் கிராம புனருத்தாரண நடைமுறை பயிற்சி வகுப்பின் முதல் ஆரம்பதினத்தன்று இந்தியா, பர்மா, இலங்கை முதலிய எல்லாவிடங்களிலிருந்தும் கூடியிருக்கும் ஊழியர்கள் மேல் சட்டைகளுடன் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பதை கண்டிருக்கிறேன்.

எங்கள் வகுப்புகள் நடப்பது மிகவும் உஷ்ணமான நாட்களிலேதான். மரியாதைக்காக இந்த சட்டை அணிவதை நான் வரவேற்றாலும், அடுத்த தினம் முதல் அவைகள் உபயோகிக்கப்படமாட்டா என்று நான் என் மனதிற்குள் சந்தோஷமடைவேன். நான் அதைப்பற்றி அதிகம் சொல்லுவதில்லை, ஆனால் அவை தேவையில்லை என்று அறிந்துக்கொள்ளும்படி செய்கிறேன். நான் சுத்தமான ஷர்டும், அரை நிஜாரும், சிறிய மேஜோடு அணிந்தே வந்து வழிகாட்டுகிறேன். உஷ்ணமாக இருக்கும்போது அளவுக்கு மிஞ்சி துணிகளையணிந்து தேகாரோக்யத்தை கெடுத்துக் கொள்ளுவது தப்பு என்று படும்படி நடந்துக் கொள்ளுகிறேன்.

காந்தி இயக்கத்தினல் ஆயிரம் கணக்கான இந்திய மக்கள் மேல் சட்டையை புறக்கணிக்க ஆரம்பித்தது ஒரு நல்ல விளைவு. அச்சட்டைகளில் அநேகம், மட்டமாகவும் இருந்தன. நகரத்தில் காலேஜில் படித்து, எப்போதும், சுத்தமாகவும், அழகாகவும் உடையணியும் ஒரு மாணவன் ஒரு வருஷத்திற்கு 18 ரூபாய் செலவில் கதர் சட்டைகளேயே அணிந்து 'அழகாகவும், நாகுக்காகவும், சுத்தமாகவும் இருக்க முடியும் என்று என்னிடம் சொல்லுகிறார். ஏதாவது விசேஷ சந்தர்ப்பங்களுக்கு அவர் ஒரு எளிய அங்கவஸ்திரத்தை உபயோகிக்கிறார். பாணியத்தில் அங்கு கையால் நெய்த நாள்படவரும் டிவில் துணியில் அழகாக தைக்கப்பட்ட ஷர்டின் விலை 10 அணு. நானும் சகாக்களும் அவைகளை அணிகிறோம். சுத்தமானதும், தேவையானதுமான துணிமணிகள் விலையுயர்ந்திருக்க வேண்டுமென்பதில்லை.

ஆனல் மார்த்தாண்டத்தில் சில தலைவர்கள் அதிக உஷ்ணமான காலங்களிலும் வேலை செய்யும்போது மேல் சட்டைகளை அணிந்தே வருகிறார்கள், மேல் சட்டையுடன் சரிவர வேலை செய்ய ஒருவராலும் முடியாது. தொழிலில் வெற்றி பெற மூன்று விஷயங்கள் தேவை என்று சர்வில்லியம் ரைட் என்பவர் சொல்லியிருக்கிறார். அ.து. நல்ல பொதுக் கல்வி, மேன்மையான கைத் தொழில் கல்வி, மேல் சட்டையை கழட்டிவிட்டு வேலை செய்யும் பழக்கம், நான் ஒரு இளைஞ தலைவரை அணுகி, ஏன் இப்படி உஷ்ண காலத்திலும் மேல் சட்டையை போட்டுக் கொள்ளுகிறீர்கள், மிஷனரிகளும், சில உயர்ந்த கவர்மெண்டு உத்தியோகஸ்தர்களையும் பார்த்து அப்படி செய்தால்தான் கௌரவமளிக்கும் என்ற எண்ணமா, என்று கேட்டேன்.

அது அப்படியில்லை, வண்ணான் கஷ்டம் அதிகம். அதாவது ஷர்டுகளை சலவை செய்துகொள்ள அதிக செலவாகிறது மேல் சட்டைகள் அணிவதால் ஷர்டுகளை சலவைக்கு போடாமல் அதிக காலம் உபயோகிக்க முடிகிறது, என்று பதிலுரைத்தார். இந்த மறைவில்லாத பதிலை நான் வரவேற்கிறேன்.

புனருத்தாரண வேலைகளில் செய்யவேண்டியது இதுவும் ஒன்று. அதற்கு சுலபமான வழியிருக்கிறது, ஒவ்வொருவரும் தங்கள் ஷர்டுகளை தாங்களே சலவைச்செய்துக்கொள்ளலாம். சலவை செய்து, இஸ்திரி போடுவதை கற்றுக் கொடுக்க ஒரு வகுப்பு ஆரம்பித்திருக்கிறோம்.

---

# இந்தியாவில் சின்கோனு பயிர்.

---

எவருக்காவது கொஞ்சம் ஜுரம் வந்தால் கொஞ்சம் கொய்னு சாப்பிடும்படி சொல்லுவது ரொம்ப சகஜம். ஆயினும் சுமார் நூறு வருஷத்திற்கு முன் இந்த மருந்தின் பெயர் தெரிந்தவர்கள் வெகு சிலரே. மேலும் கொய்னு கொடுக்கும் சின்கோனுமாம் ஒன்று கூட இத்தேசத்தில் இல்லை. ஆனல் தற்சமயம் இந்தியா தன் தேவைக்கு வேண்டிய மருந்தைதானே உற்பத்தி செய்வதுடன், இங்கிலாந்து, இன்னும் இதர வெளி நாடுகளுக்கு அம்மரப்பட்டையை தாராளமாக ஏற்றுமதி செய்திருக்கிறது.

இச்செடி முதன் முதலில் தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப் பட்டது. அது மிகவும் பிரசித்தமாக பரவியிருப்பதைக்கண்டு 1852இல் கிழக்கு இந்திய கம்பெனியின் தாவர சாஸ்திர நிபுணர் அதை நம்தேசத்திற்கு கொண்டு வந்து வளர்த்துப் பார்க்கும்படி யோசனை கூறினர். அமெரிக்காவிலிருந்து வந்துக் கொண்டிருந்த சரக்கு குறைவுபட்டுவந்ததாலும், பிரிடிஷ், டச்சு தேசத்தார்களுக்கு உஷ்ண பிரதேசங்களில் ஏராளமான பிரதேசங்கள் இருந்து வந்ததாலும், இது அவசியமாயிற்று. ஆனல் 1858ல் தான் அதற்கு வேண்டிய அனுமதி கிடைத்து ஒரு ஆராய்ச்சி நிபுணரை தென் அமெரிக்காவுக்கு அனுப்பி மேன்மையான விதைகளை அனுப்பும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

மார்கம் என்ற அந்த நிபுணர் மூன்று கோஷ்டிகளுடன் அங்கு சென்றார். பலவித இடையூர்களையும் கஷ்டங்களையும் சமாளித்து கடைசியில் ஒரு உயர்ந்த ரக செடியை அனுப்பினர். அது முதலில் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டு, பின்னிட்டு அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது.

அந்த செடியானது மேற்கு தொடர்ச்சிமலை பிரதேசத்தில் வைத்து வளர்க்கப் பட்டது. ஏனெனில் அந்த பிரதேசத்தின் சீதோஷ்ண நிலைமை ஏறக்குறைய அமெரிக்க பிரதேசத்தைப் போலவே இருக்கிறது. நீலகிரியின் சீதோஷ்ண நிலைமை இதற்கு ஏற்றதாகத் தென்பட்டது. முதல் முதலில் கவர்மெண்டார் 800 ஏகராக்களில் பயிர் செய்தார்கள். சில காலம் பின்னிட்டு, தனிப்பட்டவர்கள்

அதை பயிர்செய்ய ஆரம்பித்தார்கள். அது மெதுவாக, ஆனமலை, திருவாங்கூர், இலங்கை, கடைசியாக சிக்கிம் வரையில் பரவிற்று. சிக்கிம்மில் நீலகிரியில் பயிரான செடிகளைக்கொண்டு கவர்மெண்டார் 2000 ஏகராக்கள் பயிர் செய்தார்கள். கொய்னு, இதர மருந்துகள் எடுக்க நீலகிரியில் நடுவட்டத்திலும், டார்ஜிலிங்கிற்கு சமீபத்திலுள்ள மங்பூ என்ற இடத்திலும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இம்முயற்சி மிக்கவெற்றியை யளித்தது. 1870 இல் ஒரு அவுன்சு கொய்னுவின் விலை 20 ரூபாயிலிருந்து, 1890 இல் 14 பவுண்டு 12 ரூபாயாக குறைந்துவிட்டது.

ரப்பர், தேயிலை இவைகள் பயிர்செய்ய ஆரம்பிக்கப்பட்டபின், சின்கோனு செடியின் நிலமை மிகவும் மோசமாகி, இலங்கை முதலிய இடங்களில் மறைந்தேவிட்டது. திருவாங்கூரில் மாத்திரம் 1909 முதல் 1914 வருஷத்திற்குள் சின்கோனு பயிர்செய்யப்பட்ட பூமியின் விஸ்தீரணம் 2085 ஏகராவிலிருந்து 151 ஏகாராவாக் குறைந்துவிட்டது. சென்னையிலும் அப்படியே குறைந்துவிட்டது. இதனுல் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியும் குறைவுபட்டது. மேலும் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் வருஷம் 70,000 பவுண்டு கொய்னுவும் உள்நாட்டிற்கே உபயோகப்படுகிறது.

இந்தியா சின்கோனு பயிர்செய்யும் விஷயத்தில் அலக்ஷியம்மாக இருந்த சமயம் ஜாவாவில் இது ஜாக்கிரதையாக வளர்க்கப்பட்டு வந்தது. இப்போது ஜாவாதான் இம்மருந்தை உற்பத்திசெய்கிறது. இந்தியா அதை அதிகமாக தருவிக்க வேண்டிய நிலமை ஏற்பட்டிருக்கிறது. (கவர்மெண்டு உற்பத்திசெய்யும் கொய்னுவின் அளவு 70,000 பவு. தேசத்தின் குறைந்த பக்ஷதேவை 21,000 பவுண்டு.) இந்த நிலமை மிகவும் துரதிருஷ்டவசமானதுதான். ஏனெனில் இத்தேசத்தில் தன் தேவைக்கு போதுமானது, பயிராகும் என்பதுமட்டுமில்லாமல் அதிகப்படியாகவே பயிர் செய்யலாம்.

இந்தச்செடி பயிராவதற்கு ஏற்ற நிலம் நம்தேசத்தின் பல பாகங்களிலும் 38,000 ஏகராக்கள் இருப்பதாக சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சி சங்கம் சமீபத்தில் விடுத்த ஒரு யாதாஸ்தில் தெரிவித்திருக்கிறது.

சின்கோனு பயிர் செய்வதை கவர்மெண்டார் நிறுத்திவிட்டு, தனிப்பட்டவர்களிடமே அதை ஒப்படைக்க வேண்டும் என்று கொஞ்சநாளைக்கு முன் ஒரு அபிப்பிராயம் இருந்து வந்தது. இது தப்பு. வடக்கில் எல்லாபயிரும் கவர்மெண்டு கையில்தான் இருக்கிறது. சென்னை மாகாணத்திலும் கவர்மெண்டு பயிர் செய்யும் நிலங்களைத் தவிர மற்றவை யெல்லாம் ரப்பர், தேயிலை பயிராக மாற்றப்பட்டு வருகிறது. கவர்மெண்டு பயிர் இல்லாதிருந்தால் இந்தியா தன் தேவைக்கு ஜாவாவையே பூரணமாக நம்பியிருக்கவேண்டிய நிலமை ஏற்பட்டிருக்கும்.

---

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

வெளியூர்களில் வாழ்க்கை செலவின் அளவு 1944ம் வருஷம் மே மாத கணக்கு விவரம். விசாகப்பட்டிணம் 223 பாயிண்டுகள் (9 அதிகரிப்பு); ஏலூர் 207 (3 குறைவு); பெல்லாரி 233; கடலூர் 212 (4 உயர்வு); திருச்சி 202 (1 உயர்வு); மதுரை 207 (7 உயர்வு); கோயம்பத்தூர் 224 (2 உயர்வு); கள்ளிக்கோட்டை 234 (1 உயர்வு).

* * *

அகில இந்திய உணவு பொருள்களின் விலைவாசி யளவு பொருளாதார ஆலோசனை யாளர் கணக்குபடி 1944ம் வருஷம் மே மாதம் 27ந் தேதியில் முடியும் வாரத்தில் 228.0 ஆகிறது. அதற்குமுன் இருந்த அளவு 228.2.

* * *

கல்வி மத்திய கமிட்டி ஒரு சினிமா புத்தகசாலையை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் சினிமா கௌன்சில் அவர்களால் செய்யப்பட்ட பில்முகளை செலவு அன்னியில் அனுப்பப் போவதாக தெரிகிறது. ருஷியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கல்வி சம்பந்தமான பில்முகளை தருவிக்க பிரயத்தனம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வருஷ முடிவுக்குள் வேலையை துவக்க உத்தேசித்திருக்கும் இப்புத்தகசாலை தேசத்திலுள்ள எல்லா கல்விசாலைகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் திறந்துவிடப்படும் என்று நம்புகிறோம்.

* * *

**பித்தளை பாத்திரங்கள் உற்பத்தி.**

மத்திய கவர்மெண்டின் தீர்மானம் நியாயமான விலைக்கு ஜனங்களுக்கு பித்தளை பாத்திரங்கள் கிடைக்கும்படி செய்ய, மத்திய கவர்மெண்டார் ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் பித்தளை தகடுகளை கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாக ஒரு கவர்மெண்டு அறிக்கை கூறுகிறது. ஜுன் மாதத்திற்கு 800 டன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளிலிருந்து தயார் செய்யப்படும் பாத்திரங்களின் விலையை கட்டுப்படுத்தவும் ஒரு திட்டம் தயார் செய்யப்பட்டு அதைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

இதன்படி, இத் தகடுகள் மொத்தமாகவும் உற்பத்தி செய்யும் சில வியாபாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக தேவையாக இருக்கும் பாத்திரங்கள் மட்டும் இவர்கள் தயார் செய்யவேண்டும். அந்த பாத்திரங்கள் பொறுக்கியெடுக்கப்பட்ட வியாபாரிகள் மூலமாகத்தான் சில்லரையாக கொடுக்கப்படும் விலை இந்தியா கவர்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் விலையைவிட அதிகமாக இருக்கக்கூடாது. இவை 1 பவுண்டு 2 ரூபாய் முதல் 2-4-0 ரூபாய் வரையிலிருக்கிறது. ஆனால் இது அப்போதைக்கப்போது மாற்றப்படலாம். ஈயம் பூசாத பாத்திரங்களின் விலை 1 பவுண்டிற்கு 2 அணா குறைவாக இருக்கும்.

இதன்படி உற்பத்தி செய்யப்படும் பாத்திரங்கள் கூடிய சீக்கிரம் பொது ஜனங்களுக்கு கிடைக்கும் என்று நம்புகிறோம்.

* * *

**இந்தியாவும் சர்க்கரை ஏற்றுமதியும்.**

இந்தியாவில் 1943-44இல் முன் வருஷத்தைவிட 6,00,000 டன்கள் சர்க்கரை அதிக உற்பத்தி செய்யப்பட்டது. கரும்பு பயிர் செய்யப்பட்ட பூமியின் விஸ்தீரணம் 5 லக்ஷம் ஏகராக்கள் அதிகரித்தது. 1-9-42 தேதியோடு சர்வ தேச சர்க்கரை ஒப்பந்தத்தின் ஆயுள் காலம் முடிவடைந்துவிட்டதால், இந்தியா சர்க்கரை ஏற்றுமதி செய்யலாம். ஆனால் இந்திய பாதுகாப்பு சட்டப்படி இந்த ஏற்றுமதி உத்தரவு இல்லாமல் செய்யமுடியாது. சென்ற மார்ச்சு மாதத்துடன்

முடிவடைந்த வருஷத்தில் 110 லக்ஷ ரூபாய் மதிப்புள்ள ஏற்றுமதி இலங்கைக்கும் பாரசீக வளைகுடா பிரதேசத்திற்கும் அனுப்பப் பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

இப்படியே முன்னேற்றம் அடைந்தால் சீக்கிரத்தில் இந்தியா உலகத்தின் சர்க்கரை உற்பத்தி ஸ்தலமாகிவிடும் என்று அமெரிக்கர் ஒருவர் அபிப்பிராயப்படுகிறார். 1943-44இல் நிலக்கரி, கந்தகம் இன்னும் இதர முக்கியமான சாமான்கள் கிடைப்பது கஷ்டமாக இருந்த காலத்திலும் வெள்ளை சர்க்கரை உற்பத்தி அதிகரித்திருப்பதானது அத்தொழில் சென்ற 10 வருஷ காலத்தில் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை தெரிவிக்கிறது. இப்படி விருத்தி யடைந்து வந்தால் உலக சர்க்கரை மார்க்கெட்டில் இந்தியாவுக்கு பெருத்த ஸ்தானம் கிடைக்கும். ஏனெனில் இந்தியாவுக்கு இந்தியா சர்க்கரை உற்பத்தி செய்யும் பெரிய தேசங்களில் ஒன்று.

* * *

ஐக்கிய மாகாண கவர்மெண்டார் யுத்தத்தில் சேர்ந்திருப்பவர்களின் கிராமங்களில் 280 புதிய கிராம அ விருத்தி ஸ்தாபனங்களை ஏற்படுத்த தீர்மானித்திருக்கிறார்கள். சைன்னியத்தில் சேர்ந்தவர்கள், அவர்களுடைய குடும்பங்களுக்கு நன்மை செய்ய கிராமவாசிகளுக்கு உற்சாகம் கொடுக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

* * *

**கீழ் கோதாவரி ஜில்லாவில் கிராமங்களில் நீர்பாசன விடுதிகள்.**

அதிக உணவு பொருள் உற்பத்தி இயக்கம் சம்பந்தமாக கிழக்கு கோதாவரி ஜில்லா, ராமசந்திரபுரம் தாலூகா, யெதித கிராமத்தில் சில புஞ்சை நிலங்களுக்கு நீர்பாசன வசதிகள் அளிக்க ரூபாய் 23,248 செலவில் ஒரு திட்டம் உடனே தயார் செய்யும்படி கவர்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

* * *

**நாகப்பட்டிணம் கிராமங்களில் நீர்பாசன வசதிகள்.**

நாகப்பட்டிணம் தாலூகா பிரதபரமபுரம் முதலிய கிராமங்களில் வெள்ளையார் ஆற்றில் காவேரி கொண்டனூர் வாய்காலை விருத்தி செய்து வசதிகளை அதிகரிக்கவும், கருங்கண்ணியிதல் சந்திர நதி அணைகட்டை சீர்படுத்தவும் வேலைகள் செய்ய 53,810 ரூபாய் செலவில் ஒரு திட்டத்தை உடனே பூர்த்தி செய்யும்படி கவர்மெண்டார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

* * *

**விவசாயிகளுக்குக் கடன்.**

காம்பு நிலங்களில் ஆகாரப் பயிர்கள் செய்யவும், எரு, விதைகளுக்காக ஜில்லா விவசாய அதிகாரிகள் அளித்திருக்கும் கடனும் 1944-45ம் வருஷத்திலும் வட்டியில்லாமலே அளிக்கப்பட்டிருக்கிறது.

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---

தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

ஹிப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரசிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி.

ஸெக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.

இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிசிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும் :

ஸெக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---

வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. வியயன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைத்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடேன்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | **1,30,00,000.** |
| க்ஷேமநிதி | — | **10,00,000.** |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்**, எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.